

# வாரந்தோறும் ஒரு தீபம்!

உம்முடைய வசனம் என் கால்களுக்கு தீபம்!
(சங்கீதம் 119:105)

(வாரம் முழுவதும், புத்தொளி சுடரில் நடத்தும் தெய்வீக செய்திகள்!)

வியாழன்தோறும்

| 04.01.2024 | 01. ‘துன்பத்திலும்’ துதித்து விடுதலை காணும் தேவ ஜனம்! |
|---|---|



எந்த வறண்ட நிலையிலும், தன் ஆர்ப்பரிப்பை, துதியை இழக்காத கிறிஸ்தவர்களை நாம் காண்பது, எத்தனை பரவசமாயுள்ளது! அப்படியே, நாம் அனைவரும் வாழ்ந்து குடும்பமாய், சபையாய் சுகித்திருக்கக்கடவோம்!

விசுவாச – துதியைப்போல், ஆண்டவருக்கு மிகவும் பிரியமானது வேறெதுவுமில்லை! “துதியின் கீதம்” நம்மிடத்தில் உண்டோ? என கண்டுபிடிப்பதற்கே ‘விசுவாச பரீட்சை’ நமக்கு ஏற்படுகிறது! அவர் செய்த பல நன்மையான ஈவுகளை ‘எண்ணிப் பார்த்து, எண்ணிப்பார்த்து’ துதிப்பவர்களே, தங்களுக்கு ஏற்படும் பாலைவன வறண்ட நிலையிலும் துதித்துப் பாடிட மறக்கமாட்டார்கள்!

ஓர் இனிய ஆங்கிலப்பாடலின் கருத்தை சற்று கவனித்து தியானியுங்கள்: “என் வறண்ட ஆத்துமாவே, உன் விடுதலைக்காக நீண்ட காலமாய் காத்திருக்கிறாய்! ஆத்துமாவே, இப்போது ஓர் நற்செய்தி கேட்பாயாக ‘நீ விரும்பிய விடுதலை’ இப்போதே உனக்காக காத்திருக்கிறது...... அதைப் பாடி மகிழ்ந்து சுதந்தரிப்பாயாக! ‘என் கட்டுகள் முறிக்கப்படட்டும்’ அப்போது நான் பாடுவேன்! என நீ காத்திருப்பது பிழையல்லவோ? பார் அங்கே, உன் ஆண்டவர் உன்னை ‘இப்போதே’ மகிழ்ச்சியின் விடுதலை கீதத்தால் உன் உள்ளத்தை நிறைத்துவிட, வாஞ்சையோடு காத்திருக்கிறார்! பாடு, உன் விசுவாச துதிபாடலை கெம்பீரித்துப்பாடு! இதோ, பொங்கி வரும் ஊற்றுத் தண்ணீரை உன் கண்ணார காண்பாய்!” ஆ, அல்லேலூயா!

– ரத்னம்